தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39



பாடம் : 61
தலைப்பு : வஞ்சனை - Deceit
வேத வாசிப்பு : 2பேது.2:17-18

1. சர்ப்பம் என்னை வஞ்சித்தது - ஆதி.3:13
2. சௌந்தரியம் வஞ்சனையுள்ளது - நீதி.31:30
3. அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே - 2பேது.3:17,18

G-Pay & PhonePe - 9443558041

மாத இதழுக்கான சந்தா செலுத்த மூன்று வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946
Branch Batlagundu

'ஒரே வழி' தபால் வழி வேதபாடம்
The Master Course படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று Certificate
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.



**Batlagundu Bible College, P.O. Box No. 5, Batlagundu-624 202, South India.**

**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 25 ஜனவரி -2025 கனி - 2


ஆசிரியருரை

## ஒரே மந்தை, ஒரே மேய்ப்பன்

## One Flock and One Shepherd



வேதாகமத்தில் அநேக ஒன்றுகளைப் பார்க்கிறோம். அதைப்போல கர்த்தருக்கு அநேக சபைகள் இல்லை. அநேக இடத்தில் சபையாக கூடிவந்தாலும் அது கர்த்தருடைய சபையாகத்தான் இருக்கிறது. அதற்கு ஒரே மேய்ப்பராக இயேசுவானவர் இருக்கிறார். "இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" (யோவா.10:16). இயேசுவின் சத்தம் கேட்டு அவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிகிற யாவரையும் அவருடைய மந்தையில் சேர்க்கிறார். அப்பொழுது அது ஒரே மந்தையாக இருக்கிறது. ஒரே மேய்ப்பன் அதற்கு இருக்கிறார்.

ஒரே மந்தை என்று பார்க்கும்போது; "மோசே ஆரோன் என்பவர்களின் கையால், உமது ஜனங்களை ஒரு ஆட்டுமந்தையைப் போல வழிநடத்தினீர்" என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான் (சங்.77:20). இஸ்ரவேலை வழிநடத்தின கர்த்தர் ஒரு ஆட்டுமந்தையைப் போல அவர்களை வழிநடத்தினார். ஆறு லட்சம்பேர் நாற்பது ஆண்டுகளாக வனாந்திரத்தில் வழிநடத்தப்பட்டார்கள். அவர்களை வழிநடத்தின தேவன் அநேக அற்புதங்களினாலும் அடையாளங் களினாலும் அவர்களுக்கு முன்னே சென்றார். ஒவ்வொருவனும் ஒரு பொருளை தனக்குள்ளது என்று சொல்லவில்லை. அனைவரையும் மன்னாவினாலும், காடைகளினாலும், கன்மலையிலிருந்து புறப்பட்ட தண்ணீரினாலும் போஷித்து வழிநடத்தினார். ஏசாயா சொல்லும்போது; "மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்"(ஏசா.40:11) என்று சொன்னான்.

இஸ்ரவேலை அந்த விதமாக நாற்பது ஆண்டுகள் வழிநடத்தினார். அவர்களுடைய வஸ்திரம் பழையதாய் போகவில்லை, அவர்களுடைய பாதரட்சை தேய்ந்துபோகவில்லை. ஒரே மந்தையை அவர் தெரிந்துகொண்டபடியால் அந்த மந்தைக்கு வேண்டியவற்றை மேய்ப்பனானவன் போஷிக்கிறதுபோல தமது மந்தையை போஷித்தார். "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" என்று யூத ஜனங்களுக்கு

சொல்லப்பட்டது (லூக்.12:32). யூதர்கள் உலகளவில் ஒரு சிறுமந்தையாக இருந்தார்கள். அந்த சிறுமந்தையில் உலகத்தை இரட்சிக்கும் இரட்சகர் இயேசு பிறந்தார். யூதேயாவிலே ஆயிரங்களுக்குள்ளே பெத்லகேம் சிறிதாக இருந்தாலும் இஸ்ரவேலை ஆளும் இராஜா உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படி இயேசுவானவர் யூதேயாவில் உள்ள பெத்லகேம் என்னும் சிற்றூரில் பிறந்தார். பின்பு நாசரேத்தில் வளர்க்கப்பட்டார் எனக் காண்கிறோம்.

இந்த சிறுமந்தை தேவனுடைய மந்தையாக இருக்கிறது. ஆகையால், "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்" (1பேது.5:2,3).

மந்தைக்கு மாதிரிகளாக மூப்பர்களும் உதவிக்காரர்களும் பணியாற்றுகிறவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக இருந்துகொண்டு சபையின் காரியங்களை கண்காணிப்புச் செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்குரிய தகுதியாம்சங்களை தீமோத்தேயு, தீத்து போன்ற புத்தகங்களில் படிக்கிறோம். இவர்கள் தேவனுடைய மந்தையை மேய்க்கவேண்டும் ஆனால் கட்டாயத்தினால் அல்ல. மனப்பூர்வமாக, அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடு கர்த்தருடைய பணியைச் செய்யவேண்டியவர்கள். பிரதான மேய்ப்பராகிய இயேசு மந்தைக்காக ஜீவனைக் கொடுத்தார். அவர் ஏதாவதொன்றை எதிர்பார்த்து தன் ஜீவனைக் கொடுக்கவில்லை. மந்தையை மீட்கும்படியாகவும், அதை பரிசுத்தமுள்ளவையாக தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்காகவும் ஒப்புக்கொடுத்தார்.

அதைப்போல மூப்பர்களும், உதவிக்காரர்களும் மந்தைக்கு மாதிரியாக இருந்து கண்காணிப்பு செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவர்களிடத்தில் உக்கிராண உத்தியோகம் கொடுக்கப்பட்டுள்ளது. சில மூப்பர்களைக்குறித்து நாம் கேள்விப்படுகிறோம். மந்தையை அடித்து சாப்பிடும் மூப்பர்களாகவும், அவைகளைப் பங்கிட்டுக்கொள்ளும் கொள்ளையர்களாகவும் செயல்படுவதாக கேள்விப்படுகிறோம். இவர்கள் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது; மந்தையைக்குறித்த கணக்கை ஒப்புவிக்கவேண்டியவர்களாக இருப்பார்கள். மந்தைக்காக தம்ஜீவனைக் கொடுத்தவர் அவர்களுக்கு நியாயாதிபதியாக வருவார். ஒருவரும் தப்பிக்கொள்ள முடியாது. யாவரும் கணக்குகொடுத்தாக வேண்டும்.

இந்த மந்தை உலகத்தில் பிரித்தெடுக்கப்பட்ட மந்தை, இவர்கள் தேவனுடைய சமுகத்தில் பிரவேசிப்பார்கள். இவர்கள் இனி வருத்தப்படுவதுமில்லை, சஞ்சலப்படுவதுமில்லை. பசியடைவதுமில்லை, தாகமடைவதுமில்லை ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து ஜீவதண்ணீரண்டை நடத்துவார். இந்த மந்தையில் உங்களை நீங்கள் இணைத்துக்கொண்டீர்களா? உலகத்தில் அநேக மந்தைகள் அவருடைய நாமத்தை தரித்துக்கொண்டு நாங்கள் அவருடைய மந்தையின் ஆடுகள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் அவருடைய மந்தையின் ஆடுகளா? அப்படியானால் அவருடைய வசனத்தின்படி வாழ்கிறார்களா? அவர் ஏற்படுத்தின சபையில் அங்கமாயிருக்கிறார்களா? அவர் ஒரே மந்தையை ஏற்படுத்தியுள்ளார். அந்த மந்தை

சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது. கர்த்தருக்கு சாட்சியுள்ள சபையாக இருக்கிறது, கிறிஸ்துவின் வாசனையை வெளிப்படுத்துகிறது. அநேகரை அவருடைய மந்தையில் சேர்க்கிறது. பிரிவினையை வண்மையாக கண்டிக்கிறது. இந்த மந்தையை அடையாளம் கண்டுகொண்டு அந்த மந்தையில் இருக்கப் பிராயசப்படுங்கள்.

ஒரே மேய்ப்பன். ஒரே மந்தை என்றால் அந்த ஒரே மந்தைக்கு ஒரே மேய்ப்பன் மாத்திரமே இருக்கமுடியும். அநேக உடன்மேய்ப்பர்கள் இருக்கலாம் அவர்களெல்லாம் அந்த மந்தையின் பிரதான மேய்ப்பனாகிவிட முடியாது. அந்த மந்தையின் மேய்ப்பன் அந்த மந்தைக்காக ஜீவனைக் கொடுத்தவர். பவுல் சொல்லும்போது பவுலா உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டான், பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்று கேட்கிறான். ஆகையால் சிலுவையில் இரத்தம் சிந்தியவர் மந்தையை தம்முடைய இரத்தத்தினாலே விலைக்கு வாங்கியிருக்கிறார். அவர் மந்தையின் மேய்ப்பனாக இருக்கிறார். முற்பிதாக்களின் காலத்தில் மோசே தாவீது போன்ற மேய்ப்பர்களை தேவன் அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்தார்.

ஜனங்கள் தாவீதை நோக்கி: "சவுல் எங்கள்மேல் ராஜாவாயிருக்கும்போதே இஸ்ரவேலை நடத்திக்கொண்டுபோனவரும் நடத்திக்கொண்டுவந்தவரும் நீரே; கர்த்தர்: என் ஜனமாகிய இஸ்ரவேலை நீ மேய்த்து, நீ இஸ்ரவேலின்மேல் தலைவனாயிருப்பாய் என்று உம்மிடத்தில் சொன்னாரே என்றார்கள்" (2சாமு.5:2). இப்படிப்பட்ட தலைவர்கள் அதாவது ராஜாக்கள் அவர்களை மந்தைக்கு மாதிரிகளாக இருந்து கண்காணித்தார்கள். தாவீதை என் தாசன் என்று கர்த்தர் பல இடங்களில் சொல்லியிருக்கிறார். அவனுக்கு பின் வந்த ராஜாக்களை எச்சரிக்கும்போது தாவீதைப்போல நீ செம்மையாய் என்னைப்பின்பற்ற வில்லை என்று தம் தீர்க்கதரிசிகளைக்கொண்டு அவர்களோடு பேசிவந்தார். அந்த அளவு தாவீதை எல்லாவற்றிலும் ஒரு சிறப்பான மேய்ப்பனாக கண்டார். இந்த தாவீது தன்னை ஒரு நல்ல மேய்ப்பன் என்று பிரபகண்டம் செய்துகொள்ளவில்லை.

அவன் சொல்லும்போது; "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்" என்கிறான் (சங்.23:1). தாவீது ராஜாவாக இருந்தபோது அவனுடைய மேய்ப்பராக கர்த்தர் இருந்தார். இன்றைக்கு இவனைப்போல அந்த ஒரே மேய்ப்பரை உங்களுடைய மேய்ப்பராக கொள்ளுவீர்களானால் மெய்யான மேய்ச்சலைக் கண்டடைவீர்கள். அப்பொழுது நீங்கள் தாழ்ச்சியடையாமல் புஷ்டியும் செழுமையுமாக இருப்பீர்கள். "என் ஆடுகளை நான் மேய்த்து, அவைகளை நான் மடக்குவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசே.34:15). நீங்கள் அவருடைய ஆடுகளாயிருப்பீர்களானால் அவர் உங்களை மடக்கும்போது அவருடைய சத்தம்கேட்டு கீழ்ப்படிகிற ஆடுகளாக இருக்கவேண்டும். பெயரளவில் அவருடைய ஆடுகளாக இருந்துகொண்டு, உங்களுடைய விருப்பப்படியும் அல்லது உங்களை வழிநடத்துகிறவர்கள் விருப்பப்படியும் செய்வீர்களானால் நீங்கள் கர்த்தருடைய மந்தையின் ஆடுகளாயிராமல் உலகத்தின் ஆடுகளாயிருப்பீர்கள். உங்களைப் பார்த்து ஒருவர் இப்படிச் சொல்லுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். இவர் ஞாயிற்றுகிழமை சபைக்கு செல்லமாட்டார். ஆனாலும் இவர் தன்னை கிறிஸ்தவர் என்று சொல்லிக் கொள்ளுவார். இந்த இடத்தில் உங்களைப் பார்த்து சொன்ன ஒருவரின் வார்த்தையின்படி நீங்கள் நடந்துகொள்வீர்களானால்; உங்களுக்காக இரத்தம் சிந்தி

உங்களை பாவத்திலிருந்து விடுவித்து உங்களை பரிசுத்தப்படுத்தி, உங்களை தன்னுடைய மந்தையின் ஆடுகளாக வைத்திருக்கும் அந்த மேய்ப்பனுக்கு எப்படியிருக்கும் என்பதை சற்றே சிந்திக்கும்படி உங்களை கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்கள் அவருடைய மந்தையின் ஆடுகள் என்று சொல்வீர்களானால் நீங்கள் கர்த்தருடைய வசனத்தின்படி நடந்துகொள்ளுங்கள். அப்பொழுது அது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்.


"நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" என்றார் (யோவா.10:11). கூலியாள் ஓநாய் வருவதைக் கண்டவுடனே மந்தையை விட்டு தன் ஜீவன் தப்ப ஓடிவிடுவான். ஏனென்றால், அவன் கூலியாள் கூலிக்காக வேலை செய்கிறவன். அவன் மந்தையைக்குறித்து கவலைப்படமாட்டான். ஆண்டவர் மந்தைக்காக தன் ஜீவனைக் கொடுத்தவர். அவர் மந்தையின் மீது கவனமுள்ளவராயிருக்கிறார். தன் ஆடுகளை முடிவிலே தேவனுடைய சமுகத்திற்கு கொண்டுபோய் சேர்ப்பார். அப்பொழுது முடிவு உண்டாகும். அதுவரை அவர் தம்முடைய மந்தையை போஷித்து, நேசித்து, பாதுகாத்து, பராமரித்து வழிநடத்துகிறார் எனக் காண்கிறோம்.

அன்பு வாசகரே, மந்தையின் ஆடுகளே, நீங்கள் அவருடைய ஆடுகளாயிருப்பீர்களானால்; அவருடைய சத்தம் கேட்டு கீழ்ப்படிந்து மற்ற ஆடுகளும் ஒரே மந்தையில் சேர ஒத்துழைப்பாயிருங்கள். ஒருவேளை நீங்கள் அவருடைய மந்தையின் ஆடுகளாயிராவிட்டால் இன்றே அவருடைய மந்தையில் சேர்க்கப்பட பிரயாசப்படுங்கள். உலகத்திற்கே வெளிச்சம் கொடுக்கும் ஒரே சூரியன் அநேக நன்மைகளை நமக்கு கொடுப்பதைப்போல, உலகத்தில் உள்ள அனைத்து ஆத்துமாக்களையும் நேசிக்கும் ஆண்டவர் ஒரே மேய்ப்பராயிருக்கிறார். அவர் உலகத்தையே இரட்சிக்கும் இரட்சகராயிருக்கிறார். அவரே வழியாகவும் சத்தியமாகவும் ஜீவனாகவுமிருக்கிறார். அவருடைய மந்தையின் ஆடுகளாயிருந்து ஆசீர்வதிக்கப்படுங்கள்.

**அவருடைய மந்தையின் ஆடுகளாகிய நாம் யார்?**

மனுஷர் என்று வேதம் போதிக்கிறது. தேவன் மனிதனை மண்ணினாலே உண்டாக்கினார். நாசியிலே அவர் ஜீவசுவாசத்தை ஊதும்போது; மனுஷன் ஜீவஆத்துமாவானான் எனக் காண்கிறோம். இவன் அவருடைய மந்தையின் ஆடுகளாயிருக்கிறான். "என் மந்தையும் என் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நீங்கள் மனுஷர்; நான் உங்கள் தேவன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்" (எசே.34:31).

நாம் மனுஷர் என்றும், மண்ணிலிருந்து எடுக்கப்பட்டவர்கள் என்றும் நாம் என்றுமே மறந்துபோய்விடாதிருக்க வேண்டும். மனிதன் கொஞ்சம் கற்றுக்கொண்டவுடன் தன்னை மறந்து மேட்டிமை கொள்ள ஆரம்பிப்பான். மனிதனால் ஒரு சிறு காரியத்தைக்கூட தானாக செய்ய முடியாது என்பதுவே உண்மை. ஆனபடியால் நாம் அவருடைய மேய்ச்சலின் ஆடுகளாக இருந்துகொண்டு கர்த்தர் கொடுக்கிறவைகளை புசித்து, அவர் சத்தம் கேட்டு கீழ்ப்படிகிறவர்களாக இருந்து தேவனை மகிமைப்படுத்த வேண்டும். மிருக ஜீவன்களும், பறவைகளும் அவரை நன்றியுடன் துதிக்கின்றன என சங்கீதம் 150-ல் வாசிக்கிறோம். நாம் அவைகளைக் காட்டிலும் சிறப்பாக உண்டாக்கப்பட்டவர்கள். ஆகையால் அவருடைய மந்தையின் ஆடுகளாக இருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## மனிதன் 2002 ல் என்ன நடக்கும் என அறிய ஆவலுடனிருந்தான்

J.C.Choate

Man wondered what would happen in 2002

20ம் நூற்றாண்டு முடிவதற்கு சில மாதங்களுக்கு முன்பாக பலர் என்ன நடைபெறப்போகிறது என அறிவதில் அக்கரையுள்ளவர்களாக இருந்தனர். அதிகமான ஜனங்கள் மிகுந்த வியாகுலத்தோடு 2000 - மாவது ஆண்டை எதிர்நோக்கியிருப்பவர்களாகக் காணபட்டனர். இது நாம் வரலாற்றின் ஒரு பெரிய யுகத்தை முடித்து இன்னொரு யுகத்தை நாம் தொடங்குகின்றவர்களாக இருப்பது போல இருந்தது. அரசியலிலும் கூட, மனிதர்கள் தங்களுடைய தேசத்தை 21ம் நூற்றாண்டுக்குள் தலைமைதாங்கி நடத்தும் பதவிக்காக போராடினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, 21ம் நூற்றாண்டின் தொடக்கமும் உலகெங்குமுள்ள சமயக் குழுக்களுக்கு மிக முக்கியமான ஒரு நிகழச்சியாக காணப்பட்டது.

உண்மையாகவே, இது இப்படி நேரிட்டிருக்கையில் நூற்றாண்டு மற்றும் இயேசு இவ்வுலகை ஆண்டதாகக் கருதப்படும் ஆயிரம் ஆண்டு காலம் முடிவுற்ற அந்த ஆண்டு மற்றும் துவங்கிய இன்னொரு ஆண்டைக் காட்டிலும் எந்த ஒரு மாற்றமும் ஏற்பட்டதாக இருக்கவில்லை ,குறிப்பாக கர்த்தரோடு இது பற்றி என்னபெரியவேறுபாடு இருக்கும்? பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம்வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம் “ (2பேது.3:8) என பேதுரு கூறியதை நினையுங்கள்.

2000- மாவது வருடத்தைப் பற்றிய விவகாரம் வரையில், கார்த்தருடைய பார்வையில் உலகம் உண்டானதிலிருந்து அனைத்து ஆண்டுகளைப் பற்றிய மனிதனுடைய கணக்கு சரியானதாக இருந்திருக்கிறது என நாம் எப்படி அறிந்தோம்?. இந்தக் கணக்கு அல்லது இரண்டு அல்லது நூறு அல்லது அதற்கு மேல், ஒரு வழி அல்லது இன்னொரு வழியினால் முடிவடைந்திருக்கக் கூடும்! ஆனால் எண்ணிக்கை இருந்தாலும் கூட, அந்தச் செயல் எந்த வேறுபாட்டை ஏற்படுத்தும்? ஒரு நாள் என்பது ஒரு நாளே, மற்றும் ஒரு வருடம் என்பது ஒரு வருடமே மேலும் காலச்சக்கரம் முழுவதிலும், 2000 மாவது ஆண்டு மற்றொரு ஆண்டைக் காட்டிலும் வித்தியாசமானதாகக் காணப்படவில்லை.

பலர் 2000- மாவது ஆண்டை வரவேற்கும் படிக்கு எருசலேமிலிருக்க விரும்பினார்கள் அவர்கள் ஏதோ விசேஷித்த நிகழ்ச்சி அங்கு நடக்கும் என நினைத்தார்கள். சிலர் கர்த்தர் எருசலேம் நகரத்தில் ஆயிரம் வருடம் ஆளுகையை தொடங்கும்படிக்கு வருவார் என உறுதியுடனிருந்தனர். வரப்போவதொன்றைக் குறித்து முன்கூட்டியறியச் செய்யும் தீவிரமான எல்லா சிந்தனையும் மற்றும் மனதில் ஏற்பட்ட ஊகத்தின் தீர்வு என்னவென்றால் கிறிஸ்து அந்த நாழிகையில் அல்லது ஏதோ ஒரு குறிப்பிட்ட தேதியில் வருவதற்கு வாக்குப்பண்ணவில்லை! மாறாக, அவர், “ அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்” ( மத். 24 : 36) என கூறியிருந்தார். இப்போது, கிறிஸ்து எப்போது வருவார் என்பதை பிதா ஒருவர் மாத்திரம் அறிந்திருக்கிறபோது, எவ்வாறு உங்களுக்கும் அல்லது எனக்கும்

அல்லது வேறொருவருக்கும் அந்த நாளை ஊகித்துப் பார்க்க இயலக் கூடியதாக இருக்கும்? மேலும் கிறிஸ்து 2000 - மாவது ஆண்டில் மீண்டும் வருவார் என்று நமக்கும் உறுதியாக நினைத்துக் கொள்ள எவ்வாறு இயலும்? அவர் அந்த நாளுக்கு முன்பு அல்லது அந்த நாளுக்குப் பின்பு வர இயலும், ஆனால் ஒரு மனிதனும் அதன் எவ்வழியையும் அறிந்திருக்கமாட்டான். இப்படிப்பட்ட காரியம் தேவனுடைய கரங்களில் உள்ளது மேலும் நாம் அவைகளை அவரிடமே விட்டு விட வேண்டும்.

கர்த்தர் நீதியுள்ள 1000 வருட ஆட்சி செய்யும்படிக்கு எருசலேமுக்கு மீண்டும் வருகிறார் என்பதைப் பற்றிய வினாவானது பரிகாசத்திற்குரியதாகும். வேதாகமம் எவ்விடத்திலும் இவ்வாறான கோட்பாட்டினை போதிக்கிறதில்லை. இயேசு மீண்டும் பூமிக்கு ஏன் வரப்போகிறார்? அவர் ஒரு முறை பூமிக்கு வந்து, புறக்கணிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார். அவர் ஏன் மீண்டும் வரவேண்டும்? வருவதற்கான நோக்கம் என்ன? கிறிஸ்து பரலோகத்திலுள்ள பிதாவினிடத்திற்கு எழுந்தருளிப் போனபோது, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் என்பதாக வேதம் கூறுகிறது (அப்.1:11). அவர்கள் அவர் எப்போதாவது வந்து மீண்டும் பூமியின் மேல் ஆளுகையை நிலைநாட்டுவார் என்று சொல்லவில்லை. குறிப்பாக பவுல், கர்த்தர் வரும்போதும், நாம் அவரை சந்திக்கும்படி ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்!என்று குறிப்பிட்டிருக்கிறார் ( 1 தெச. 4:16,17). இது ‘‘பரவசத்தில்’’ அல்லது எருசலேமில் ஒரு மாம்ச பிரகாரமான ராஜ்யத்தில் ஆயிரவருட ஆட்சியில் நம்பிக்கையுள்ளவர்களால் வர்ணிக்கப்பட்ட ஒரு காட்சியல்லவா!

இத்தோடு கூட பலர் “Y2K” (2000 - மாவது ஆண்டு) யின் மேல் செய்யும்படிக்கு ஒரு பெரிய பிரச்சனையை உருவாக்கி, அனைத்து கம்ப்யூட்டர்களும் செயலிழந்து போகும் மேலும் உலகில் ஒவ்வொரு இயந்திர சாதனத்தின் மூலம் தேவையான பாதுகாக்கப்பட்ட விஷயங்கள் எல்லாம் ஸ்தம்பித்துவிடும் என்ற பயத்தை உருவாக்கி கொண்டிருந்தார்கள் நாம் கம்ப்யூட்டர் பிரச்சனைகள் சரியாக பழைய ஒழுங்கு நிலைக்கு மீண்டும் திரும்பும் வரை 2000-மாவது ஆண்டு தொடக்கத்திற்கென தண்ணீரையும், உணவையும், பணத்தையும் சேமித்து வைக்கும்படி ஊக்குவிக்கப்பட்டோம். சிலர் அந்த நாளை பற்றி எதிர்பார்த்திருந்த விபரீதம் ஏற்கனவே சரியாக்கப்பட்டன எனக் கூறி, அந்த பயத்தினை போக்கினார்கள்.

எப்படியாயினும், 21 ம் நூற்றாண்டின் முக்கியகாரியம், என்னவென்றால் காலம் நிறைவேறும் முன்னே, தேவனிடத்தில் விசுவாசம் வைத்து. கிறிஸ்துவின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிவதின் மூலம் அவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டு, இரட்சிப்படையும்படிக்கு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுவதும், அவரிடத்தில் நம்பிக்கையுடனிருப்பதுமே ஆகும். அப்போது தான் அவர் மீண்டும் வரும்போது அவரை சந்திக்க நாம் ஆயத்தமாயிருப்போம்..... அந்த நாழிகை எப்போதாகவும் இருக்கலாம். ( எபி. 11:6; யோவா. 14:1-3; மாற். 16:16;அப்.2:38 -47; வெளி.2:10).

## வேத அறிவுப்போட்டி எண் 290 ன் விடைகள்

1. யோய்தா - 2நாளா.24:21
2. எத்தியோப்பிய மந்திரி - அப்.8:31
3. ஒரு சுருள் - எஸ்றா 6:2
4. மரித்தார் - ரோம.5:6
5. நெகேமியா - நெகே.9:16
6. பவுல் - 1கொ.9:11
7. ஏழு - எஸ்தர் 2:9
8. பவுல் - 1கொ.14:10
9. யோபு - யோபு 19:25
10. முக்காடு - 2கொ.3:15

## வேத அறிவுப்போட்டி எண் 290 ல் வெற்றிபெற்றவர்கள்

1.S.செல்வராஜ் சாலமோன் - திருநெல்வேலி
2.A.டேவிட் ஜெயசந்திரன் - மதுரை
3.Mrs.ஃபுளோரன்ஸ் சீத்தர் - சென்னை
4.D.அன்புக்கமலம் - காரைக்குடி
5. S.ஜாய் சந்திரகாந்தா - நல்லூர்
6.Mrs.ஜேன் தர்மராஜ் - திருநெல்வேலி
7.S.அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
8.G.லதாஎலிசபெத் - புதுச்சேரி
9.Mrs.ஆலிஸ்குணசீலி - சாயர்புரம்
10.Mrs.ஜெயாமேரித்தாய் - திண்டுக்கல்
11.Mrs.பியூலாஜேசுரத்தினம் - புதுச்சேரி
12.E.அன்புகமலம் - பனைகுடி
13.Mrs.கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
14.Mrs.லலிதாபெவின்சன் - சிவகங்கை
15. S.சாந்தகுமாரி - நாசரேத்
16. Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
17. Mrs.பாலின்மார்ட்டின் - சிவகங்கை
18. Mrs.சந்திராஆல்பெர்ட் - திருநெல்வேலி
19.Mrs.ரூத்ஜெயராணி - திருநெல்வேலி
20.R. அந்தோணியம்மாள்- கலுங்குவிளை
21.Mrs.ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
22. Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
23.R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
24.M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
25.A.அன்னாள் ஜெபக்கனி - கோவை
26. B.ஸ்டெல்லாம்மா - கூத்தூர்
27.V.C.ரூபவல்யா - தூத்துக்குடி
28.Mrs.ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
29.K.S.மாணிக்கவாசகம் - திருசசி
30. P.சந்திராடேனியல் - நஞ்சான்குளம்
31.E.ஜாய்ஹெலன்புனிதா - சென்னை
32.J.ஜான்சி - ஆனைமலை
33.N.வசந்தகுமாரி - வத்தலக்குண்டு
34.M.குமார் - ஆந்திரா
35.Mrs.ஜெயாபாணிஜெபராஜ்- மேற்குதாம்பரம்
36.G.லீலாவதி - சென்னை

## வேத அறிவுப்போட்டி எண் 291 ன் விடைகள்

1. நீதிமானை - சங்.5:12
2. பவுல் - கலா.2:4
3. நீதிமானுக்காக - நீதி.13:22
4. கிறிஸ்துவை - எபே.1:23
5. ஆம் - பிர.12:12
6. பிலிப்பிய சபை - பிலி.1:13
7.ஏசாயா - ஏசா.51:7
8.ஆம் - கொலோ.4:10
9.எரேமியா - எரே.21:8
10. தெசலோனிக்கே - 1தெச.1:8

## வேத அறிவுப்போட்டி எண் 291 ல் வெற்றிபெற்றவர்கள்

1. Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
2.Mrs.ரூத்ஜெயராணி - திருநெல்வேலி
3.V.C.ரூபவல்யா - தூத்துக்குடி
4.Mrs.லலிதாபெவின்சன் - சிவகங்கை
5.Mrs.ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
6.A.ஆலிஸ்குணசீலி - சாயர்புரம்
7.Mrs.ஜெசீலிஜெயக்கொடி - திருசசி
8.S.செல்வராஜ் - திருநெல்வேலி
9.Mrs.அன்னாள் ஜெபக்கனி - கோவை
10.D.அன்புக்கமலம் - காரைக்குடி
11.R.ஞானசிரோன்மணி - மதுரை
12.S.ஜாய்சந்திரகாந்தா - நல்லூர்
13.Mrs.ஜெயாபாணிஜெபராஜ் - மேற்கு தாம்பரம்
14.E. ஜாய்ஹெலன்புனிதா - மேற்கு தாம்பரம்
15.Mrs.பியூலாஜேசுராஜன் - புதுச்சேரி
16.Mrs.ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
17.S.செல்வராஜ் - தூத்துக்குடி
18.Mrs.கிறிஸ்டோபல் - கோவை
19.S.அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
20.K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
21.Mrs.உஷாசாம் - தூத்துக்குடி
22.Mrs.பாலின்மாட்டின் - சிவகங்கை
23.P.சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
24.Mrs.இம்மாக்குலேட் விக்டர்பாபு - அந்தியூர்
25.J.ஜான்சி - ஆனைமலை
26.Mrs.லீலாவதி - சென்னை
27.Mrs.சந்திராஆல்பர்ட் - திருநெல்வேலி
28.Mrs.பாலின்டேனியல் - கீழ்பாக்கம்
29.P.ஜான்சி செல்லத்துரை - திருச்சி
30.R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
31.M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
32.N.வசந்தகுமாரி - வத்தலக்குண்டு
33.B.ஸ்டெல்லாம்மா - கூத்தூர்
34.Mrs.ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
35.D.விஜயகாந்தா - கூத்தம்பாக்கம்
36.A.டேவிட் - மதுரை
37.M.குமார் - திருப்பதி
38. Mrs.ஜேன்தர்மராஜ் - திருநெல்வேலி


பெண்கள் பகுதி

# தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா?

Can Man Find the Way to God?

பாடம் -1

*-Betty*



## தேவன் ஒருவர் இருக்கிறாரா?

## Is There a God?

தேவன் ஒருவர் இருக்கிறாரா? இந்தக் கேள்வியை எப்போதாவது நீங்கள் உங்களுக்குள் கேட்டிருக்கிறீர்களா? இக்கேள்வியை உண்மையாகவே கேட்டிருந்தால், தேவனில் ஆழமான விசுவாசம் கொண்டுள்ள ஒவ்வொரு மனித ஆன்மா; முழுவதும் தேவனை மறுதலிக்கிற மனிதன், மற்றும் அநேகக் கடவுள்கள் மேல் நம்பிக்கை வைத்திருக்கிற மனிதன் நாமெல்லாரும் இந்தக் கேள்வியோடு மல்லுக்கட்டி நம்முடைய சுயஅறிவில் ஏதோ ஒரு வகையான முடிவிற்கு வந்திருப்போம்.

நாம் வாழ்கிற இந்த சமயசார்பற்ற உலகில், அநேகர் தேவனைப் பற்றிய இக்கேள்வியை ஒரு முக்கியமற்ற அலமாரியில் அடுக்கிவைக்கப்பட்ட புத்தகத்தைப்போலவே தங்கள் மனதில் "நான் மிகவும் அலுவலிலிருப்பதால் இப்படிப்பட்ட அனைத்திலும் இப்போது தலையிட முடியாது" எனக் கூறும் மனப்பாங்குள்ளவர்களாயிருக்கலாம். "நான் குழந்தையாய் இருந்தபோது போதிக்கப்பட்டவற்றிலேயே நம்பிக்கையுள்ளவராகயிருப்பேன்" அல்லது "நான் எனக்காக படித்து முடிக்க நேரமிருக்கும்வரை அறிவியல் அறிஞர்களின் வார்த்தையைப் பின்பற்றுவேன்" என்று சொல்லலாம்.

மற்றவர்கள், ஆழமான படிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட பயத்தினால், தங்கள் வாழ்நாள் முழுவதும் அவர்கள் நம்பியிருந்த நம்பிக்கையை ஆய்வு செய்ய தயங்குகிறவர்களாகவுமிருக்கின்றனர். மேலும், தங்களின் "ஆறுதலின் இடம்" எதுவோ அதைப் பின்பற்றுகின்றனர். என்னுடைய குடும்ப அங்கத்தினர்களும் நெருங்கிய நண்பர்களும் கிறிஸ்தவர்களாக அல்லது இந்துக்களாக அல்லது இஸ்லாமியராக அல்லது நாத்திகர்களாக இருப்பார்களென்றால், படிக்கின்ற எண்ணங்களும் அன்பிற்குரிய ஒவ்வொருவருடைய முடிவுகளும் தவறான பீதி உண்டாக்குகின்றவையாக இருக்கும். இப்படிப்பட்ட கற்றலுக்கு ஊக்கமளிக்கப் போதுமானவை எவையேனும் இருக்கிறதா? முடிவிலே, போதுமான பலத்தோடு தனியாக நிற்க, தேவை ஏற்பட்டால், ஒருவருடைய திடநம்பிக்கையின் மேல் அஸ்திபாரம் போட்டவர்களாயிருக்க ஏதேனும் உண்டா?

**ஜீவனில் அல்லது மரணத்தில், இக்கேள்வி ஒவ்வொரு ஆத்துமாவினால், நிச்சயமாகப் பதிலளிக்கக்கூடியவையாக இருக்கிறது**

தேவனின் தொடர் உயிர்வாழ்வினைப் பற்றிய மாறுபட்ட கருத்துடைய இக்கேள்வியை நாம் ஒவ்வொருவரும் கொண்டிருக்கிறோம். நீங்கள் எப்போதாவது ஏன் என்று மனித எண்ணித்தின் எதிரில் உள்ள திகைக்க வைக்கும் எல்லா கேள்விகளையும் குறித்து ஆச்சரியமடைந்திருக்கிறீர்களா? தேவனிடத்தில் விசுவாசம் கொண்டிருக்கும் மக்கள் அடிக்கடி மூடநம்பிக்கையுள்ளவர்கள் போலவும் கல்லாதவர்கள் போலவும் இருக்கின்றனர். எனவே, அநேக அறிவியல் மற்றும்

கல்வியறிவு சார்ந்த உலகத்தால் இக்கால அறிவும் ஆவிக்குரியவற்றைப் பரிகாசப்படுத்துவதும் தேவனைப் பற்றிய எண்ணம் ஏன் முழுவதுமாக அலட்சியம் செய்யப்பட்டதாயிருக்கவில்லையா?

கடந்தகால வரலாற்று மற்றும் தொல் பொருள் ஆராய்ச்சி பதிவேட்டிற்கு உங்கள் கவனத்தைத் திருப்புங்கள், அப்போது **நீங்கள் மனித வாழ்வின் மையப்பகுதியில் தேவனைக் கண்டுபிடிப்பீர்கள்:** தேவனை ஆராதிப்பதும், தேவனுக்குக் கீழ்ப்படிய முயற்சிப்பதும், மரணத்தை எதிர்நோக்குதலும்; தேவனுடைய எதிர்பார்ப்பையும் கூட நீங்கள் கண்டுகொள்வீர்கள். இன்றைக்கும் கூட மனிதவர்க்கம் இரண்டு பெரிய குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது: ஏதோ, ஒருவகையில் தேவனை ஏற்றுக்கொண்டு தங்கள் வாழ்வை கழிப்பவர்கள் என்றும் தேவன் உயிரோடிருக்கிறார் என்பதை மறுதலித்து, அவர் மனிதனுடைய எண்ணத்தில் ஒரு பொய்யான நிர்மானம் மட்டுமே என்று நிரூபிக்க முயற்சிப்பவர்களாக தங்கள் வாழ்வை கழிக்கிறவர்கள் என்றும் இருபெரும் குழுக்களாக இருக்கின்றனர் ஆனால் - ஏற்றுக்கொள்வதில் அல்லது மறுதலிப்பதில் - ஒவ்வொரு கலாச்சாரத்தின், ஒவ்வொரு காலத்தின், உலகமுழுவதிலும் தேவன் - மையப்பொருளாகக் கருதப்பட்டவராயிருக்கிறார்.

மக்கள் தங்கள் வாழ்வின் அலுவலில் உண்மையாகவே மறுதலித்து, தவறென நிரூபித்து தேவனுடைய தொடர் ஜீவியத்தை பொய்யென நிரூபித்து, கட்டுக்கதையை விட மேலானவர் என அவரை பிரகடணம் செய்வது வஞ்சகப்புகழ்சியல்லவா - இது வெளிப்படுத்தப்படுகின்றதா? என்கின்றனர். இல்லாத வேறொருவருடைய வாழ்வினை "பொய்யென நிரூக்கும்" முயற்சியில் யாரோ ஒருவர் தன் வாழ்வினைக் கழித்துக்கொண்டிருக்கிறாரென எப்போதாவது நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நம்மிடம் ஏதோ ஒன்றை பற்றி சொல்லமுடியாதா?

## "அறிவுபெருத்த" ஒரு மதசார்பற்ற உலகில் தேவனை மறுதலித்தல்

நிச்சயமாக, இன்று இவ்வுலகில் அநேகர் தேவனுடைய மற்றும் சமயக் கருத்துக்களை அவமதிக்கின்றனர். அவர்கள் மறைமுகமாக அல்லது வெளிப்படையாக பரிணாம வளர்ச்சியின் மூலம் மனிதவர்க்கம் பிற்காலத்தில் "ஒரு கடவுள்" மற்றும் முடவன் நடக்கப் பன்படுத்தும் கவையுள்ள கொம்பைப்போல "சமயத்தை" சிறிது சிறிதாக அறிவித்தான் என பிரகடணப்படுத்துகிறார்கள். அவர்கள் உயிரினம் அறிவியலால் கொடுக்கப்பட்டது என்று எல்லா பதில்களும் எல்லா கேள்விகளுக்கும் எல்லாப் பொருட்களுடன் சம்பந்தமுடையதாயிருக்கிறது என்கின்றனர். ஆனால் தாமதிக்கவும்! எவ்வகையிலும் இது என்ன "பரிணாமக் கொள்கை"? இது எல்லாவற்றிலும் வித்தியாசமுடையதும் குழப்பத்தின் அமைப்புகளிலும், இதன் ஆண்/மற்றும்/பெண் ஜோடிகள், **வாழ்க்கை– இல்லா** நிலையிலிருந்து **வாழ்க்கை** நிலைக்கு தாவுதலும், மேலும் பரிணாமம் பல லட்சம் ஆண்டுகளுக்கு மேலாக எண்ணற்ற ஒன்றுக்கொன்று சார்புற்ற அமைப்புகளும் என்ற நம்பிக்கையையே நாம் இன்றுவரை பார்க்கிறோம். ஆனால் யாராவது உண்மையிலேயே **வெளிப்படையான** - பரிணாம (ஒரு வாழ்க்கை அமைப்பிலிருந்து இன்னொரு வாழ்க்கை அமைப்பிற்கு மாறுகின்ற) மாற்றத்தைக் கண்டிருக்கிறீர்களா? அறிவியல் இம்மாற்றம் நடைபெற முடியுமென **நிரூபித்திருக்கிறதா?** இல்லை, "பரிணாமம்" இதனுடைய முழு நம்பிக்கையின்

பாகம் மற்றும் கொள்கைகள் வெறுமனே ஒரு நாத்திக மதமாகவும், அறிவியல் என்ற பெயரின் அடிப்படையில் பகட்டாக காண்பிக்கும் ஒன்றாகவும் இருக்கிறது. இதை நம்புகிறவர்கள், தெரிந்துகொள்ளுதலின்படியும் விசுவாசத்தின்படியும் அதுவே உண்மையென்று நம்புகின்றனர். ஏனென்றால் இதன் அஸ்திபாரம் நிரூபிக்கப்படாத, அதேசமயம் பரிகாசத்திற்கேதுவான கேலிகூத்தாகவும், "சமயத்தின்" அடிப்படையிலில்லாமல், ஆனால் வளர்ந்து வருகிற அறிவியலின் அடிப்படையிலே இவ்வாறு உள்ளது.

அதிகமான மக்கள் "பரிணாமக் கொள்கையை" ஆதரித்து "பெரிய ஓசை" யை நோக்கி (பூதக்கண்ணாடியில் பார்க்கக்கூடிய சிறிய பொருளைவிட மிகச் சிறிய பொருளை முன்னதாகவே அழுத்த முடியும் என்ற கருத்தோடு இன்று நாம் பார்க்கும் பிரபஞ்சத்தில் வெடிக்கச் செய்யும் பொருளை) அல்லது பிரபஞ்சத்திலுள்ள மிகப்பெரிய துகள் எப்படி உருவானது என்று விளக்கமளிக்கும் நோக்கத்தில் "பரிணாம கொள்கையை" ஆதரிக்கின்றனர். அவர்கள் ஆரம்பிக்கும் சில காரியங்களிலிருந்து வரும் பதில்களே வேறு கேள்விகளை உருவாக்குகிறது என்பது ஒரே ஒரு பிரச்சனையாயிருக்கிறது. அந்த சில காரியங்கள் எங்கிருந்து வந்தது? யார் அல்லது எது அதை உருவாக்கிற்று? அல்லது அக்காரியம் நித்தியமானவையா? அது எப்போதும் ஜீவிக்கின்றவையா?

இக்கேள்விகளுக்கு இப்போது இக்கொள்கை பதிலளிக்கிறது. முழுபிரபஞ்சமும் ஜீவனுள்ளவற்றிலிருந்து ஒரு நேர்த்தியான வெற்றிடத்தில் இயற்கையாக உருவானது என்று ஆழ்ந்து சிந்தித்து கற்றறிந்த அறிவியல் அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்! அவர்கள் கூற்று சரியானதா? வெறுமையி லிருந்து ஒவ்வொன்றும் உருவானது என்பது உண்மைதானா? மேலும் வேறு எந்த வெளித்தோற்றத்திலிருந்தும் உருவாகவில்லை என்பது உண்மை தானா?

இதை சோதித்து பார்க்க முயற்சி செய்யுங்கள். நேர்த்தியான ஒரு வெறுமையானது உருவாயிருந்தது, உலகத்தின் வெளிப்பகுதியிலிருந்து முத்திரையிடப்பட்டிருந்தது, ஒரு கிருமி, ஒரு பாக்ட்டீரியா அல்லது எந்த ஒரு மிகச்சிறிய ஒரு பொருள் உலகினுள் இருக்கவில்லை. பிறகு கவனியுங்கள் நோர்த்தியான வெறுமையான இடத்தை வெடிக்கச் செய்ய எவ்வளவு நாட்கள் ஆகும் - எந்த ஒரு காரணமுமில்லை - உருண்டையான பிரபஞ்சத்திற்குள் - நேர்த்தியான சமநிலை மேலும் சிக்கலான ஒழுங்கின்மையானதாகவும் இருந்தது. அப்போதுதான் ஒவ்வொரு பகுதியும் ஒன்றை ஒன்று சார்ந்து வளர்ச்சியுற்று சரியான நேரத்தில் மற்ற பகுதிகளோடு சார்ந்து நிலைநிறுத்தப்பட ஏதுவாகும்! இது அறியப்படாத, வெறுமையானவை பூர்த்திசெய்யப்பட அற்புதங்களின் வெடிப்பு நடைபெற்றது என்பது நம்புவதற்கு ஏதுவாக இருக்கிறதா? ஒன்றுமில்லாமை யிலிருந்து சிலவற்றை உண்டாக்க முடிந்தது, **பிரதானமான ஒருவரில்லாமல் இது நடைபெறாது அல்லவா?**

இப்போர்பட்ட கருத்தை அறிவியலின் 'அறியப்பட்ட விதி' ஒவ்வொன்றையும் வெளிப்படையாகவே எதிர்க்கிறது, ஆனால் பரிணாமக் கொள்கையை ஆதரிக்க மக்கள் நல்லதொரு கருத்தை தெரிந்தெடுக்க சந்தேகத்தை எழுப்புகின்றனர். மேலும் அறிவியலற்ற கொள்கையானது நேர்மறையான காரணம் உண்டென கருதுவதற்கு மாறாக ஒவ்வொன்றிற்கும் பின் படைப்பினை விட ஒரு சக்தி மிகுந்த ஒன்று உள்ளது என்கின்றனர்: நாம் உயிருள்ள உன்னதமானவர் தேவன் எனக்கூறுகிறோம்.

# அதிகமாய்க் கொடுக்கப்படும்
# *More Will be Given*

-Glory Arjunan

அன்பு சகோதரிகளே, இதை வாசிக்கும் அனைவருக்கும் என்னுடைய புத்தாண்டு வாழ்த்துகளை கூறிக்கொள்கிறேன்.

நம்முடைய ஆயுசு நாட்கள் கடந்து ஓடுகின்றன. ஒருநாள் பிறப்பதை நீ அறியாயே என்ற வசனத்திற்கேற்ப நாளை என்பது நம் கையில் இல்லை. பிரசங்கி சாலொமோன் கூறுவதைப் போல் எல்லாம் மாயையே! இந்த மாயையான வாழ்க்கையிலும் நம்மை உண்டாக்கின தேவன் எப்போதும் நம்மேல் இரக்கமும், உருக்கமும் உள்ளவராக பரிபூரண ஆசீர்வாதத்தைக் கொடுக்கச் சித்தமுள்ளவராக இருக்கிறார். ஆனால் அதைப் பெற்றுக்கொள்ள நாம் பாத்திரவான்களாயிருக்கிறோமா என்று நம்மை சோதித்துப் பார்ப்பது அவசியம்!

தேவன் ஒவ்வொருவரையும் வெறுமனே படைக்கவில்லை. ஒவ்வொருவரையும் தனித்திறன்மிக்கவராகவே படைத்துள்ளார். தனித் தனியே நமக்கென்று கொடுக்கப்பட்டுள்ள அந்த திறமைகள் அல்லது தாலந்துகளை நாம் எப்படி பயன்படுத்தினோம் இனிமேலும் எப்படி பயன்படுத்தப் போகிறோம் என்பதைப் பற்றி ஆராய்வது வரவிருக்கும் புதிய ஆண்டிற்குள் பிரவேசிக்கப்போகும் நமக்குப் பயனுள்ளதாய் இருக்குமென நம்புகிறேன்.

"அதிகமாக கொடுக்கப்படும்" என்றால் அது என்ன? எது அதிகமாக கொடுக்கப்படும்? ஆசீர்வாதமா அல்லது ஆசீர்வாதமில்லாதவையா? மத்தேயு 25-ம் அதிகாரத்தில் பரலோகராஜ்யத்தை பல உவமைகளோடு ஒப்பிட்டு இயேசுகிறிஸ்து விளக்கமளிக்கிறார். அதில் வசனம் 14 முதல் 30 வரை தூரதேசமாய் புறப்பட்டுப் போகிற ஒரு எஜமானைப் பற்றியும் அவனுடைய ஊழியக்காரர்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார். இவ்வசனங்களில் அந்த எஜமான் தன் ஊழியக்காரரில் ஒருவனுக்கு ஐந்து தாலந்தும், இன்னொருவனுக்கு இரண்டு தாலந்தும் மற்றொருவனுக்கு ஒரு தாலந்தும் கொடுத்து விட்டு செல்லுகிறான். தூர தேசத்திற்கு பிரயாணமாய் சென்ற அந்த எஜமான் "வெகுகாலமானபின்பு திரும்பி வந்து அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான் அப்பொழுது ஐந்து தாலந்தை வாங்கினவன் வேறு ஐந்து தாலத்தைக் கொண்டு வந்து, ஆண்டவனே, ஐந்து தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே, அவைகளைக்கொண்டு இதோ, வேறு ஐந்து தாலந்தை சம்பாதித்தேன் என்றான். அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய்; அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்" (மத்.25:19-21). இவ்விதமாகவே இரண்டு தாலந்தை வாங்கினவனும் வந்து; ஆண்டவனே, இரண்டு தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக் கொண்டு இதோ, வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான். அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய் அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான் (மத்.25:22-23). ஆனால் ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து ஆண்டவனே, நீர்

விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும் தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன் ஆகையால் நான் பயந்து போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்; இதோ, உம்முடையதை வாங்கிக்கொள்ளும் என்றான்" (மத்.25:24-25).

அன்பு சகோதரிகளே இந்த உவமையிலிருந்து நீங்கள் என்ன அறிந்துகொள்ளுகிறீர்கள்? தேவன் உங்களுக்கென கொடுத்த தாலந்துகளை அவருடைய நாமத்தின் மகிமைக்கென்று பயன்படுத்தி அதை பெருக்குகிறவர்களாக இருக்கிறீர்களா? அல்லது தேவ நாமத்தை தூஷித்துக் கொண்டு; ஒன்றுமே செய்யாமல் சோம்பேறியாக வாழ்ந்து கொண்டு, எப்போது பார்த்தாலும் தேவன் எனக்கு இதைச் செய்யவில்லை, அதைச்செய்யவில்லை, ஆசீர்வாதம் என்பதே என் வாழ்க்கையில் கிடையாது என்று சொல்லிகொண்டு ஒன்றுமே முயற்சிக்காமல் தேவனுடைய நாமத்தை அறிவிக்காமல் தேவன் உங்களுக்குக் கொடுத்த தாலந்தை புதைத்து வைத்திருக்கிறீர்களா? இன்றே மனந்திரும்பி வரும் புதிய ஆண்டிலிருந்தாவது தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தும்படி உங்கள் தாலந்தை பயன்படுத்துங்கள் அப்படிப் பயன்படுத்த தீர்மானிப்பீர்களானால் ஐந்து தாலந்துள்ளவன் பெற்ற ஆசீர்வாதத்தைப் பெறுவீர்கள்.

அந்த எஜமான் ஒரு தாலந்தை வாங்கி அதை பயன்படுத்தாமல் புதைத்து வைத்திருந்தவனிடமிருந்து அதை வாங்கி பத்து தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள் என்றான். "உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்" என்றார் (மத்.25:29). ஆம் அப்படிப்பட்டவர்களுக்கு அதிகமாய் கொடுக்கப்பட்டது. உள்ளவன் எவனோ அவன் உண்மையும் உத்தமுமாய் ஜீவிக்கும்போது இன்னும் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இக்கூற்று ஒருவேளை உங்கள் பார்வையில் அல்லது உலகத்தார் பார்வையில் அநியாயமாகக் காணப்படலாம். உண்மையும், நியாயமும் இது தான் பிரியமானவர்களே! ஸ்திரீகளாகிய நமக்கோ உலகப்பொருட்களின் மேல் கொள்ளை ஆசை. அதை வாங்கவேண்டும், இதை வாங்கவேண்டும், அவர்கள் வைத்திருப்பது மிக அழகாய் இருக்கிறது. அதைப் போல் நமக்கும் ஒன்று வேண்டுமென அடுக்கிக் கொண்டே போகிறவர்கள் அநேகர். நவீன உலகில் பல நவீனங்கள் கண்களின் இச்சையைத்தூண்டி, இச்சைகளுக் குட்படுத்துகின்றன. எனவே நாம் சிலவேளைகளில் இப்படியாக நினைக்கிறோம். இல்லாதவனிடத்தில் உள்ளதை எடுத்துக்கொள்வது பாவமா? அவனிடத்தில் உள்ளதை எடுத்துக்கொள்ளலாமா? என்றெல்லாம் நினைத்து உள்ளவனைப் பார்த்து பொறாமை கொண்டு அவனுக்கு ஏன் இன்னும் அதிகமாய்க் கொடுக்கப்படுகிறது என நினைக்கிறோம். அன்பு சகோதரிகளே, வசனம் ஒருபோதும் தவறிழைக்காது. அது ஏழுதரம் புடமிட்டவை. அதிகமாக சாம்பாதிக்க அல்லது முயற்சி எடுத்து, உழைக்க நினைக்கும் ஒவ்வொருவருக்கும் அதிகமாய்த்தான் கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் பரிபூரணமும் அடைவார்கள்.

ஆம், சகோதரிகளே, இப்புத்தாண்டிலாவது நம் எண்ணத்தை மாற்றிக்கொண்டு தேவனால் நமக்கென்று கொடுக்கப்பட்ட தாலந்துகளை புதைத்து வைக்காமல் பயன்படுத்தி பெருக்கிக் காட்டுவோம். இந்தப் புத்தாண்டில் பரிபூரண ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுவோம். கர்த்தர் தாமே நமக்கு உதவிசெய்வாராக!



# கானாவூர் கல்யாணம்

- G.kaleeshwaran

இந்த பூமியில் எத்தனையோ வகையான புத்தகங்கள் உள்ளது. அந்த புத்தகங்கள் பூமியில் உள்ளவைகளைப் பற்றி பேசுகிறது. சூரியன், நட்சத்திரங்கள் இவைகளெல்லாம் தேவனால் உண்டாக்கப்பட்டவைகள். இவைகளைக் கொண்டு காலங்களைக் கணித்து விடலாம். ஆனால் எப்படி வீடுவாங்கலாம், நிலம்வாங்கலாம், நகைவாங்கலாம் மற்ற பொருட்களை வாங்கலாம் என்று இந்த பூமிக்குரிய புத்தகங்கள் உபதேசம் பண்ணுகிறது. அந்த உபதேசத்தை பின்பற்றுகிறவர்கள் அதை நம்பி அழிந்து போகின்றார்கள். அது ஒரு மனிதனை காப்பாற்றாது. இந்த பூமியில் உள்ள எல்லாப்புத்தகங்களைக் காட்டிலும் மிகவும் உயர்வானது பரிசுத்த வேதாகமம். இதிலுள்ள போதனைகள் தேவனால் கொடுக்கப்பட்டது. தேவனுடைய உபதேசம் ஒரு மனிதனை இரட்சித்து பரலோகபாக்கியத்தைக் கொடுக்கும். இப்புத்தகத்தைப் பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதினார்கள்.

இந்த பரிசுத்த வேதாகமத்தில் யோவான் என்ற சுவிசேஷபுத்தகத்தில் 2ம் அதிகாரம் 1 முதல் 11 வசனங்களில் இயேசு கலிலேயாவில் உள்ள கானா ஊர் கலியாண வீட்டில் செய்த அற்புதத்தை வாசிக்கலாம். இயேசுவின் தாய் அங்கே இருந்தாள் என்று வாசிக்கிறோம். இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டு இருந்தார்கள். அங்கே திராட்சரசம் குறைவுபட்டபோது இயேசுவின் தாய் அவரை நோக்கி: அவர்களுக்கு திராட்சரசம் இல்லை என்றாள். திராட்சரசம் குறைவுபட்டால் ஒன்று சமையல் காரரிடத்தில் சொல்லவேண்டும் இல்லையென்றால் கல்யாண வீட்டாரிடத்தில் சொல்லவேண்டும். அவள் இயேசுவிடம் சொல்லவேண்டிய நோக்கம் என்ன? பெற்றோர்களைப் பார்த்து பிள்ளைகள் அம்மா அப்பா என்று அழைப்பார்கள். ஆனால் ஆண்டவர் இயேசு மரியாளைப் பார்த்து; "ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார்" (2:4).

பின்பு அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றார். உண்மை அதுதான். அவர் வேளை வந்தவுடன் அங்குள்ள வேலைக்காரரை நோக்கி: கற்சாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார். அவர்கள் அவருடைய வார்த்தையின்படியே அங்கு இருந்த ஆறு கற்சாடிகளில் தண்ணீர் நிரப்பினார்கள். ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர் பிடிக்கும் கற்சாடிகளாயிருந்தன. வெறும் தண்ணீரை ஊற்ற சொல்லுகிறாரே என்று ஒருவரும் கேட்கவில்லை. மரியாள் சொன்னபடியாக அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரே அதின்படி செய்யுங்கள் என்ற வார்த்தையின்படியே செய்தார்கள். நடந்தது என்ன? இப்பொழுது மொண்டு, பந்திவிசாரிப்புக்காரனிடத்தில் கொண்டுபோங்கள் என்றார். அவன் திராட்சரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்தபோது, மணவாளனை அழைத்து எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு, ருசிகுறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும்

வைத்திருந்தீரே என்றான். இந்த திராட்சரசம் எங்கேயிருந்து வந்ததென்று தண்ணீரை மொண்ட வேலைக்காரருக்குத் தெரிந்ததேயன்றி பந்திவிசாரிப்புக்காரனுக்குத் தெரியாது. பொதுவாக திராட்சரசத்தில் தண்ணீரை கலந்து பிந்தி வந்தவர்களுக்கு கொடுப்பார்கள். ஆனால் நடந்தது என்ன எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு, ருசிகுறைந்ததைக் கொடுப்பான், நீரோ, நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்று மணவாளனை அழைத்து கேட்டான். அந்த மணவாளனுக்கே தெரியாது அது எங்கிருந்து வந்ததென்று.

இன்றைக்கும் வேதத்தை வாசிக்கும் அநேகருக்கு இயேசுவின் அற்புதத்தைப்பற்றியும், அவருடைய உபதேசங்களைப்பற்றியும் தெரியும். ஆனால் திராட்சரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்த பந்திவிசாரிப்புக்காரனைப்போல; அதை ருசியுள்ள திராட்சரசமாக மாற்றினவர் இயேசு என்பதை அறியாமல் இந்த உலகத்தில் எல்லாவற்றையும் அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் உடுத்துகிற உடை, உணவு எல்லாவற்றையும் மனிதனுக்காக உண்டுபண்ணினவர் ஆண்டவர் இயேசு. "ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" (மத்தேயு 6:31-33).


கனாவூர் கலியாண வீட்டில் அற்புதம் செய்த கர்த்தரையும் அவருடைய உபதேசத்தையும் நீங்கள் விசுவாசிப்பீர்களானால் உங்களுடைய வாழ்க்கையிலும் அநேக நன்மைகளை அவரால் பெற்றுக்கொள்வீர்கள்.

**ஆசிரியர் கடிதம்...**

வாசகர் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். தேவன் உங்களை தொடர்ந்து ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம். இந்த வருடதுவக்கத்தில் முதலாவது மணிவேளையில் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினீர்களா? பல நல்ல தீர்மானங்களை எடுத்து இருப்பீர்கள் என நம்புகிறேன். பின்னிட்டுபாராமல் இராஜ்ஜியத்தின் பணிக்காக பணியாற்றுங்கள். நமது மாத இதழை இவ்வருடத்தில் ஒருவருக்காவது அறிமுகம் செய்து அவர்களுடைய முழு முகவரியை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நீங்கள் பெற்ற ஆசீர்வாதத்தை அவர்களும் பெற்றுக்கொண்டு சத்தியத்தை அறிந்து கொள்ள உதவியாக இருக்கும். தேவ கிருபை நம்அனைவரோடுங்கூட இருப்பதாக!

*அன்புடன் உங்கள் ஆசிரியர்.*

**ஜெபியுங்கள்**



- வருடத்தை நன்மையால் முடிசூட்டிய தேவனுக்கு நன்றி சொல்லி...
- எடுத்த தீர்மானத்தின்படி வருடமுழுவதும் நடக்க முற்படுங்கள்...
- ஒவ்வொரு நாளும் வேதம் வாசிக்கும் பழக்கத்தை துவக்குங்கள்
- நமது மாத இதழை மாதம் ஒருவருக்கு அறிமுகப்படுத்துங்கள்
- 24 hours Twoc Tv Channel தொலைக்காட்சி மற்றும் யூடிப் நிகழ்ச்சிக்காக...

**இவ்விதழில் வெளிவந்துள்ள ஒவ்வொரு செய்தியிலிருந்தும் ஒவ்வொரு கேள்வி கேட்கப்பட்டுள்ளன. சரியான விடை எழுதி அனுப்பும் ஒவ்வொரு வாசகருக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன.**

வாசகருக்கான நற்செய்தி

**இம்மாத இதழ் வேத அறிவுப்போட்டி**
**TWOC NO.6 ஜனவரி 2025**

1. என் மந்தையும் என் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நீங்கள் மனுஷர் என எழுதும் தீர்க்கன் யார்?
2. இயேசுவின் இரண்டாம் வருகை எவருக்குத் தெரியும் ?
3. தேவன் ஒருவர் இருக்கிறாரா? என எழுதும் எழுத்தாளர் பெயர் என்ன?
4. ஒரு தாலந்தை வாங்கி எத்தனை தாலந்து உள்ளவனுக்குக் கொடுக்கப்ட்டது?
5. தன் தாயைப் பார்த்து ஸ்திரீயே என்று சொன்னவர் எவர்?
6. இயேசுவானவர் யூதாஸ் உட்பட சீடர்களின் கால்களைக் கழுவினாரா?
7. எபேசு பட்டணத்தில் மரியாள் வீடு இருந்ததாக சொல்லப்படுகிறதா ?

இப்போட்டியில் கலந்து கொள்ளுகிறவர்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள **TWOC No,**உங்களுடைய **Ref.No,** உங்களுடைய முழு முகவரி மற்றும் உங்கள் மொபைல் எண்ணுடன் எழுதி இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்கவும். உங்களுக்கான பரிசுகளை பதிவு தபால் மூலம் அடுத்த மாதம் 10ம் தேதிக்குள் அனுப்பிவைப்போம். நீங்கள் போஸ்ட் மேனிடம் நேரடியாக கையொப்பம் இட்டு பெற்றுக்கொள்ளலாம். தேவன் உங்கள் முயற்சியை ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

**குறிப்பு:** முன்னமே தொடர்ந்து வேத அறிவுப்போட்டியில் கலந்துகொள்ளுகிறவர்கள் இதிலும் கலந்து கொள்ளலாம் ஆனால் தனித் தனியே தபால் மூலம் பதில் எழுதி அனுப்பவேண்டும். நன்றி. ஆசிரியர்.

## Jesus build one Church Matthew 16:18
## 1. The Church of Christ - 33 AD Romans 16:16

| | | |
|---|---|---|
| 2. Roman Catholic | - | 311 AD |
| 3. Orthodox Church | - | 1054 AD |
| 4. Luthern Church | - | 1517 AD |
| 5. Presbyterian Church | - | 1560 AD |
| 6. Baptist Church | - | 1606 AD |
| 7. Mormons Church | - | 1830 AD |
| 8. Jehovah Witness | - | 1879 AD |
| 9. Adventist Church | - | 1831 AD |
| 10. Pentecostals | - | 1900 AD |

**நடப்புச் செய்திகள்**

- ஜனவரி 20-ல் டிரம்ப் அமெரிக்க அதிபராக பதவி ஏற்கவுள்ளார்.
- சென்னையில் மீண்டும் மாடுகள் அட்டகாசம்.
- தமிழகத்தில் Startup நிறுவனங்களின் எண்ணிக்கை 10,005 ஆக உயர்ந்துள்ளது .

நன்றி - NewsPoint

| Simple Sermons That Teach | பாடம் 1 |
|---|---|
| துவாலையின் பாடம் | |
| Lessons of the Towel | *- Jerry Bates* |



1. அநேக சமயங்களில் நாம் அவர் செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறபடி செய்வதில்லை.

2. அன்பின் நிமித்தமாக நாம் வாழும் வழியை தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தை நமக்கு அவர் அனுமதிக்கிறார். ஒன்று தேவனுக்கு அல்லது நமக்கு நாமே ஊழியம் செய்வது அன்பினால் நாம் அவருக்கு செவி சாய்த்து பணி செய்யவேண்டுமென்று அவர் விரும்புகிறார். நாம் அப்படிச் செய்யும்படி நம்மை இயங்கச் செய்வதும் அன்பே.

3. யோவா 13-ம் அதிகாரத்தில் மனிதன் சரி என்று நினைக்காத ஒன்றைச் செய்கிறார். அவர் சீடர்களின் கால்களைக் கழுவுகிறார்.

4. கிறிஸ்துவின் வேளை அதாவது அவர் மரிக்கும் நேரம் இப்பே பாது வந்துவிட்டது இன்னும் 24 மணி நேரத்தில் அவர் மரித்துவிடுவார்.

I நாம் தாழ்மையைப்பற்றிய பாடத்தை கற்க வேண்டியிருக்கிறது.

**அ)** இயேசுவானவர் யூதாசும் சேர்ந்து தன் சீடர்களோடு அந்த கடைசி இராவிருந்துண்கிறார்.

1. டாவின்சி வரைந்த மிகவும் பிரசித்தி பெற்ற கடைசி இராவிருந்துண்கிறார் என்ற ஓவியத்தில் சித்தரிக்கப்பட்ட வண்ணம் இயேசுவும் அவருடைய சீடர்களும் அமர்ந்திருக்கவில்லை.

2. அவர்கள் தங்கள் முழங்கைகளை ஊன்றி அநேகமாக பக்கவாட்டில் சாய்ந்திருந்தார்கள்.

**ஆ)** சில வேளை உணவு வேளையில் எதிர்பாராத ஒன்றை இயேசு செய்தார். அவர் எழுந்து கால்களை கழுவத்தொடங்கினார்.

1. அந்தக் காலத்தில் கால்களைக் கழுவுதல் என்பது சமூக நடவடிக்கைகளில் ஒன்றாக இருந்தது. ஒவ்வொருவரும் காலணிகளை அணிந்து கொண்டு பாலஸ்தீன வீதிகளின் பாதைகளில் நடந்து செல்வார்கள். அவர்கள் கால்கள் மிகவும் அசுத்தமாகிவிடும்.

2. விருந்தினரை உபசரிக்கும் ஒரு நல்ல மனிதர் வாசலில் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்திருப்பார். ஒருவர் வீட்டிற்குள் வரும் போது அவர் கால்களை ஒருவர் கழுவுவார்.

3. பொதுவாக இதை ஒரு அடிமை செய்வான் ஏனென்றால் இது எல்லாவற்றிலும் மரியாதைக் குறைவாகக் கருதப்பட்ட செயல். ஏன் என்று என்னால் புரிந்து கொள்ள முடிகிறது என்றோ முடியவில்லை என்றோ கூறினால், விருந்தினர்களின் கால்களைக் கழுவும்படி ஒரு எபிரெய அடிமையை கட்டாயப்படுத்துவதென்பது சர்ச்சைக்குரிய ஒன்றாகிவிடும். புறசாதி அடிமைகள் மட்டுமே விருந்தினர்களின் கால்களைக் கழுவும்படி கட்டளையிடப்பட முடியும். ஒரு அடிமை இல்லாத பட்சத்தில் ஒரு நல்ல விருந்தளிப்பவரே அதைச் செய்வார்.

4. ஏன் அவர்கள் கழுவாத கால்களோடு ஒரு மேசையைச் சுற்றி அமர வேண்டும் லூக்கா இந்த கடைசி இரா விருந்தைப் பற்றி 22:24-ல் சீடர்கள் நம்மில் யார் பெரியவன் என்று வாதிடுவதை காண்கிறோம். ஒவ்வொருவரும் இந்த தாழ்வான பணியைச் செய்வதற்கு ஒருவரிலும் மற்றவர் பெரியவர் என்று பேசுவதை நாம் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. இப்படியொரு வேலையைச் செய்ய முன் வந்தால் தன்னைத்தானே தாழ்த்திக்கொள்வதாகிவிடும்.

5. அந்த அறை பெருமையுள்ள இருதயங்கள் மற்றும் அசுத்தமான கால்களால் நிறைந்திருந்தது.

6. இது இப்படியிருந்த வேளையில் இயேசு நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றைச் செய்தார். அவர் யூதாஸ் உட்பட சீடர்களின் கால்களைக் கழுவுகிறார் (13:5) எல்லாரிலும் பெரியவர் முழங்காலில் நின்று பாதங்களைக் கழுவுகிறார்.

7. அவர் இப்படி அவர்களுடைய கால்களைக் கழுவும் போது எல்லா சின்னச் சின்ன பேச்சும் நின்று விட்டதை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. விவாதம் உடனே நின்று விடுகிறது. அவர்கள் அவமானமாக வெட்கத்தில் தலை குனிந்து ஒருவரையொருவர் சங்கடத்தில் பார்த்து தலை குனிந்தார்கள்.

**இ)** தாமே செய்ய மனமில்லாத எதையும் நாம் செய்ய வேண்டுமென்று சொல்வதில்லை இயேசு கேட்கிறதில்லை.

1. இயேசு பூமிக்கு வந்தபோது, அவர் "தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபம் எடுத்தார்.

2. லூக்கா 22:27ல் "நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரன் போலிக்கிறேன்" என இயேசு கூறுவதாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

**ஈ)** நாம் துவாலையை எடுக்க வேண்டும்.

1. தாழ்மையை நாம் உதட்டளவில் பேசுகிறோம் ஆனால் நம்மில் அநேகர் தாழ்மையை ஒரு நல்ல பண்பாக விரும்புவதோ, பாராட்டுவதோ கிடையாது.

2. நம்மில் அநேகர் சில சமயம் அவமானப்படுத்தப்பட்டதாக உணர்ந்திருப்போம். நம்மில் யாரும் தாழ்மைப்படுத்தப்படவோ வெட்கப்படுத்தப்படவோ அல்லது சங்கடமான நிலைக்கு தள்ளப்படவோ விரும்புவதில்லை. ஆனால் கால்களைக் கழுவுவது என்பது தாழ்மைப் படுத்தப்படும் அனுபவமாகும். சிலருக்கு சேவை செய்வது சில வேளைகளில் அவமானமாக இருக்கும்.

3. நம்மில் அநேகர் சேவகன் என அழைக்கப்படுவதை பெரிதுபடுத்துவதில்லை. ஆனால் நாம் சேவகனாக நடத்தப்பட்டு ஒரு பொருட்டாக எண்ணப்படுவதில்லை ஆனால் சிலுவையிலறையப்பட்ட இரட்சகரை சிலுவையிலறையப்பட்டவர்களே தொர்ட்பு கொள்ள முடியும்.

4. உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். உலகம் தான் உயர்த்தப்படுவதை (மத்.23:11,12) தேடுகிறது ஆனால் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களோ சேவை செய்ய ஒரு வாய்ப்பைத் தேடுகிறார்கள்.

**உ)** நாம் எப்படி இந்த மனப்பாண்மையை உடையவர்களாயிருக்க முடியும் (13:3).

1. இயேசுவானவருக்கு தெரியும். அவர் பரலோகத்தின் மகிமையையும் பிதாவோடு உள்ள ஐக்கியத்தையும் விட்டு வந்தார். ஆனால் தெரிந்தே அதை விட்டார்.

2. இயேசு யார் என்று அவருக்குத் தெரியும். அவர் தேவனுடைய குமாரன். அவர் மனிதரை பாவத்திலிருந்து இரட்சிக்க வந்த மேசியா.

3. தாம் எங்கே போகிறோம் என்பது இயேசுவானவருக்குத் தெரியும். தாம் சிலுவைக்குப் போகிறோம் என்பதும் உயிர்த்தெழப்போவதும் பின்பு பரலோகத்துக்குப் போவதும் இயேசுவுக்குத் தெரியும்.

4. நமக்கும் அதேனென்று காரியங்கள் கட்டாயம் தெரிய வேண்டும். நாம் பாவ வாழ்க்கையிலிருந்து வந்தோம். இப்போது தேவனுடைய பிள்ளையாயிருக்கிறோம். நித்தியத்தை நாம் தேவனுடனான ஐக்கியத்தில் கழிக்கப் போகிறோம். மிகவும் உறுதியானவர்களே (விசுவாசத்தில்) தாழ்மையாயிருக்க முடியும். - தொடர்ச்சி அடுத்த இதழில் வெளிவரும் எதிர்பார்த்து காத்திருங்கள்.



## எபேசு சபை - The Church of Ephesus

'எபேசு' என்றால் விரும்பத்தக்கது என்று பொருள். இது ஆசியாவின் ரோமானிய மாகாணத்தின் ஒரு நகரம். இது கேஸ்டர் (Cayster) ஆற்றின் முகப்புக்கருகில் ஆசியாமைனரின் 3 மைல் தொலைவில் மற்றும் சாமோஸ் (Samos)தீவுக்கு எதிரே இருந்த இந்நகரம் பெரிய கப்பல்கள் செல்லக்கூடிய துறைமுகத்துடனும், ஆசியாமைனரின் உள்பகுதியை அடையும் பள்ளத்தாக்கின் நுழைவாயிலில் இருந்தது. மேலும் எபேசு நகரம் மாகாணத்தின் முக்கிய நகரங்களுடன் நெடுஞ்சாலைகளால் இணைக்கப்பட்டதால் ஆசியாவிலேயே தரை வழியாக எளிதில் அணுகக்கூடிய நகரமாகவும் இருந்தது. எபேசு, வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட நேரத்தில் ஆசியா மைனரில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகத் திகழ்ந்தது. தோராயமாக 2,25,000 மக்கள் தொகை கொண்ட இந்நகரம் ஆசியா மாகாணத்தின் தலைநகராகவும் நுழைவாயிலாகவும் இருந்தது. இது அரசியல் மற்றும் சமூக ரீதியாக பெரும் செல்வம், சிறந்த கலாச்சாரம் மற்றும் பெரும் ஊழல் நிறைந்த நகரமாகவும் இருந்தது. ஆசியாமைனரின் ஏழு சபைகளில் எபேசு மட்டுமே ஆரம்பத்தில் இருந்ததை நாம் கண்டுபிடிக்க முடியும்.

பவுல் தனக்கு முன் வந்த அப்பொல்லோவின் மூலம் தேவனுடைய மக்களின் கூட்டமாகிய இந்த சபையை உருவாக்கினார் என நம்பப்படுகிறது. பவுலின் மூன்றாவது மிஷனரி பயணத்தில் அவன் யூத ஜெப ஆலயத்தில் இரண்டு ஆண்டுகள் பிரசங்கித்தான் (அப்.19:8,10). "இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்" (அப்.19:10). பவுல் தீமோத்தேயுக்கு கடிதங்களை எழுதியபோது தீமோத்தேயு எபேசுவில் ஒரு சுவிசேஷகனாக இருந்தான் (1தீமோ.1:4). எபேசில் உள்ள சபையில் மூப்பர்கள் இருந்தார்கள். "மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வரவழைத்தான்" (அப்.20:17). இதிலிருந்து ஆசியாவின் ரோமானிய மாகாணம் முழுவதும் சுவிசேஷத்தைப் பரப்புவதில் எபேசில் இருந்த கர்த்தருடைய சபை மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

நாளடைவில் எபேசு சபை கிறிஸ்தவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தேவனைப் புகழ்வதைக் காட்டிலும் மனிதர்களைப் புகழ்வதை அதிகம் விரும்பினார்கள். இந்தச் சூழ்நிலையில் தான் கிறிஸ்து இந்த சபையின் தூதனுக்கு பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்ட அப்போஸ்தலாகிய யோவானைக் கொண்டு எழுதுகிறார். வெளிப்படுத்தின விசேஷம் 2:1-7 வரை உள்ள வசனங்களில் ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலது கரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியில் உலாவிக் கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது எனத் துவக்குகிறார். ஏழு பொன் குத்துவிளக்குகள் (ஏழு சபைகள்) மத்தியில் உலாவிக் கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது என ஆரம்பிக்கிறார். எபேசு சபையின் ஏழு நற்காரியங்களையும் குறிப்பிடுகிறார். 1. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். 2.உன் பிரயாசத்தையும் அறிந்திருக்கிறேன். 3. உன் பொறுமையை அறிந்திருக்கிறேன். 4. நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும் 5. அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலர் என்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும் 6. நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும் 7. என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல்

பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன் என்கிறார். இத்தனை நற்குணங்களைக் கொண்ட எபேசு சபை, கிறிஸ்துவின் மேல் கொண்ட அன்பினிமித்தமும் இளைப்படையால் பிராயாசப்பட்டு உழைத்திருக்கிறது. "ஆனாலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு" என்றார் (வெளி.2:4).

எபேசு சபை எல்லா நற்செயல்களைச் செய்திருந்த போதும், கர்த்தராகிய இயேசு இவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் ஆதி அன்பை எதிர்பார்க்கிறார். எபேசு சபையினரோ தாங்கள் இயேசுவின் மீது கொண்டிருந்த ஆதி அன்பை விட்டு விட்டு உலகத்தின் மேல் அன்பு வைத்தனர் எனவே "நீ இன்னநிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத் தண்டை அதினிடத்தினின்று நீக்கி விடுவேன் என்றார் (வெளி.2:5). மேலும் இன்னொரு காரியத்தையும் இயேசு வலியுறுத்துகிறார். " நான் வெறுக்கிற நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை நீயும் வெறுக்கிறாய், இது உன்னிடத்தில் உண்டு" என்றார் (வெளி.2:6). இது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. இந்த நிக்கொலாய் மதஸ்தர்கள் வெளிப்படுத்தல் எழுதப்பட்ட சிறிது காலம் இருந்தனர். தேவன் வெறுக்கிற காரியமாகிய விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட பன்றி இறைச்சியை உண்ணத் தொடங்கினர். ரோமானிய பேரரசில் அதிகமாக பேய்கள் வழிபாடுகள் நடந்து கொண்டிருந்தன அவற்றில் பல விலங்குகளை பலியிடுவது, அதன்பின் இறந்த விலங்குகளின் இறைச்சியை பெரிய விருந்துகளில் பயன்படுத்துவது நடைமுறையில் இருந்தது. இந்த விருந்துகளில் நிக்கொலாய் மதஸ்தர் பங்கேற்க விரும்பி, தேவனின் விருப்பத்தை மீறி செயல்பட்டனர் (அப்.15:29) இது இவர்களது விசுவாச துரோகத்தின் ஆரம்பம்.

கடைசியாக, "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது" என்றார் (வெளி.2:7). முடிவுபரியந்தம் ஆதி அன்பைக் காத்துக்கொள்ளுபவர்களுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருககிற ஜீவவிருட்சத்தின் கனியை புசிக்கக்கொடுப்பார். அவர்களுக்கு மாத்திரமல்ல 21ம் நூற்றாண்டில் வாழும் கிறிஸ்துவர்களுக்கும் வாக்குப்பண்ணியிருக்கிறார். இறுதிவரை நிலைத்திருப்போம், ஜெயங்கொள்ளுவோம்.

எபேசு சபையை பார்த்து தன்னைப்பற்றி முதலாவது ஆண்டவர் இயேசு முகவுரை கொடுக்கிறார். பின்பு பாராட்டுகிறார். ஆனாலும் குறையை சுட்டிக்காட்டுகிறார். கடிந்துகொண்டு எச்சரிக்கிறார். மனந்திரும்பும்போது வாக்குத்தத்தமான ஆசீர்வாதத்தை கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். இன்றும் அந்த பகுதியில் எபேசிய கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததர்க்கான ஆதாரங்கள் துருக்கி நாட்டில் இருக்கிறது. அப்பொல்லோ மற்றும் ஆக்கில்லா, பிரிஸ்கில்லா தம்பதியினரும் எபேசில் இருந்த முதல் கிறிஸ்தவர்கள். அப்போஸ்தலனாகிய யோவானின் இல்லம், அவன் புதைக்கப்பட்ட கல்லறை இன்றும் அநேகர் பார்வைக்கு உள்ளது. குறிப்பாக யோவானின் பராமரிப்பிலிருந்த இயேசுவின் தாய் மரியாளின் வீடு அங்கு இருக்கிறது. மலைப்பாங்கான இடத்தில் அவள் வசித்து வந்துள்ளாள். அந்நாட்களில் ஸ்தேவானின் நிமித்தமாக எருசலேம் சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. "சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்" என (அப்.8:4) வாசிக்கிறோம்.

உலகத்திலுள்ள ஒவ்வொரு கர்த்தருடைய சபையும் சற்று காதுகொடுத்து கேட்டு எந்த விஷயத்தில் தவறாகப்போகிறோம் என்பதை அறிந்து மனந்திரும்பினால் வாக்குத்தத்தமான ஜீவவிருட்சத்தின் கனியை நம் ஆண்டவர் இயேசுவிடம் பெற்றுக்கொள்ளுவோம்.

சிறுவர் பகுதி

# "எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ"

வேத பகுதி: மாற்கு 11:21-24



நம்முடைய ரட்சகராகிய கிறிஸ்துவானவர் தனது சுவிசேஷப் பயணங்களின்போது; வேத கட்டளைகளை போதிக்க பல உவமைகளை கையாண்டிருக்கிறார். அப்படி ஒரு முறை பேதுரு பட்டுப்போன அத்திரமரத்தை காட்டி கேட்டபோது, கிறிஸ்துவானவர் அவனுக்குச் சொன்ன பதில்: நம் தலைப்பில் அடங்கியிருக்கிறது. அதாவது மாற்கு 11:21-24 வரை வாசிப்போமானால் அதிலும் குறிப்பாக 24-ம் வசனம் வாசிப்போமானால்; அதில் இயேசு "எவைகளை கேட்டுக்கொள்வீர்களோ" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ என்று ஆண்டவர் சொல்வது நாம் ஜெபத்தில் கேட்பது பற்றிக்கூறுகிறார்.

புரியாதவர்கள் இந்தவார்த்தையை தவறாக புரிந்துகொள்ளுகின்றனர். ஒரு பஸ்ஸில் கூட்டம் அதிகமாக இருந்தது; அதில் ஒரு கணவனும் மனைவியும் ஏறினார்கள். அந்த பஸ்ஸில் உட்கார இடம் கிடைக்காததினால் பஸ்ஸின் முன் பகுதியில் அவருடைய மனைவியும் பின்பகுதியில் கணவரும் ஏறிக்கொண்டார்கள். கண்டக்டர் முன் உட்கார்ந்த அந்தப் பெண்ணிடம் டிக்கட் வாங்கும்படி சொன்னார். அதற்கு அந்த பெண் பின்னால் மீசை வைத்துகொண்டிருப்பார் அவரிடம் போய் கேளுங்க என்று கூறினாள். அவரும்போய் தேடி சிறிது நேரம் கழித்து கண்டக்டர் அந்த பெண்ணிடம் திரும்பி வந்து ஏம்மா எல்லாரும் முன்னால்தான் (முகத்தில்) மீசை வைத்துக்கொண்டிருப்பாங்க யாரும் பின்னால் மீசை வைத்திருக்க மாட்டாங்க, டிக்கட் வாங்குமா என்று கூறினார்.

தம்பி தங்கைகளே புரிகிறதா! ஒரே வார்த்தையை எப்படி புரிந்து கொள்ளுகிறார்கள் என்று, இப்படித்தான் இன்றைக்கு அநேகர் பலவிதமாய் வேதவசனங்களைப் புரிந்துகொண்டு தான்தோன்றித்தனமாக போதித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய ஜெப விண்ணப்பங்களை யாருடைய பாதத்தில் வைத்து, யார் மூலமாக பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற உண்மை தெரியாமல் ஜெபித்துக்கொண்டிருக்கிறார்கள். நம் விண்ணபப்ங்களை பிதாவின் பாதத்தில் வைத்து இயேசு கிறிஸ்துவின் மூலம் பெற்றுக்கொள்ளவேண்டும். நாம் கேட்கும் அல்லது படிக்கும் வசனங்கள், யார், யாரிடம் சொன்னது, எதற்காக எந்த சூழ்நிலையில் ஏன் சொல்லப்பட்டது என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டியவர்களாயிருக்கிறோம். வசனங்களை பகுத்தறியுங்கள் என்று வேதம் வலியுறுத்துகிறது. அப்படி நாம் வசனங்களை பகுத்தறியாவிட்டால் அந்த பஸ் கண்டக்டர் போலவே, பின்பக்கத்தலையில் இல்லாத மீசையை தேடிக்கொண்டிருக்கவேண்டியதுதான்.

வேதவசனங்களை ஆராய்ந்து பாருங்கள் அதன்படி நடக்க பிரயாசப்படுங்கள். தேவன் கிறிஸ்துவின் மூலம் நம் அனைவரையும் மென்மேலும் ஆசீர்வதிப்பாராக!

**மனப்பாட வசனம்**

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" - யோவான் 5:39

## வேத அறிவுப் போட்டி எண்: 293


போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் வேத அறிவுப்போட்டி எண்ணையும் குறிப்பிட்டு எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. ஏதோமிலுள்ள ஞானிகளையும், ஏசாவின் பர்வதத்திலுள்ள புத்திமான்களையும் அழிப்பேன என்று கர்த்தர் எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு பேசினார்?
2. மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்கள் என எழுதும் ஊழியக்காரன் யார்?
3. என் ஆத்துமா என்னில் தொய்ந்துபோகையில் கர்த்தரை நினைத்தேன் என்றவன் யார்?
4. கர்த்தருடைய கண்கள் எவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது?
5. நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன்; அவர் எனக்காக வழக்காடி என் நியாயத்தை விசாரிக்கு மட்டும் அவருடைய கோபத்தைச் சுமப்பேன் என எழுதும் தீர்க்கதரிசி யார்?
6. அநீதத்தின் கூலியை விரும்பி, தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்து கொள்ளப்பட்டவன் யார்?
7. குளிர்ச்சியான நாளில் வேலிகளில் பாளையமிறங்கி சூரியன் உதித்தமாத்திரத்தில் பறந்துபோம் அது எது?
8. அவரில் நிலைத்திருக்கிற எவனும் எதைச் செய்கிறதில்லை என வேதம் தெளிவாக எடுத்துரைக்கிறது?
9. கர்த்தாவே, நீர் பூர்வகாலமுதல் என் தேவனும், என் பரிசுத்தருமானவர் அல்லவா? நாங்கள் சாவதில்லை என எழுதும் தீர்க்கன் யார்?
10. விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன் என்று எந்த சபைக்கு ஆவியானவர் சொன்னார்?

## வேதாகம ஆய்வு... 77

**துரோப்பீமு - Trophimus**



1. துரோப்பீமு என்றால் புஷ்டிகரமானவன் என்று அர்த்தம்
2. எபேசு பட்டணத்தைச் சார்ந்தவன்
3. புறமார்க்கத்திலிருந்து இயேசுவை ஏற்றக்கொண்டவன்
4. பவுலோடு ஊழியத்தில் இருந்தவன் – அப்.21:29
5. மிலேத்துவில் துரோப்பீமுவை வியாதிப்பட்டவனாக விட்டு வந்ததாக பவுல் எழுதியிருக்கிறார் – 2தீமோ.4:20

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2024-2026
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2024-2026
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
January 2025

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்




- Our TV Program: Six Days of the Week
- *Every Monday, Tuesday, Wednesday, Thursday, Friday & Saturday 6.00 P.M on Joy TV*
- ***24 Hours Worldwide Web Twoc TV Channel***



YouTube: the word of christ

**JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW**





Contact Us: 6379350509

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA




Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan